www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டுமே இந்தியா அங்கீகரிக்கப் போவதாகவும், அவர்களை மட்டுமே சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்குப் போகும்படி அழைப்பதாகவும் அறிக்கைகள் வெளிவருகின்றன.

ஈழப் போராளிகள் பலர் கைதுசெய்யப்பட்டு தமிழ்நாட்டில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பின் தெற்காசியப் பிராந்திய கூட்டுறவுக்கழக ( )மாநாடு இம் மாதம் 15 ம் திகதி பெங்களூரில் தொடங்கியபோது சிறீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர். "புதிய பிரேரணை" ஒன்றை இந்தியக் குழுவிடம் கையளித்தார். இதை தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் கொடுத்து பேச்சுவார்த்தைக்கு போகும்படி தூண்டினர்.

இவைகளையும், இந்திய, வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் வரும் செய்திகளையும் தொடுத்துப் பார்த்தால், இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை மட்டும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும்படி வரவழைப்பதாக தெரிந்து கொள்ளலாம். மேலும், இவர்கள் மட்டும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதன் மூலம்தான் ஒரு சுமுகமான தீர்வினைக் கொண்டுவர முடியுமென இந்திய அரசின் நிர்வாக மேல்மட்டத்தில் நம்பப்படுகிறது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இது குறித்து ஈழப் புரட்சி அமைப்பு அறிக்கையொன்றினை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு போகும்படி இந்திய அரசு அழைத்திருப்பதை ஈழப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக கருதுகிறோம்.

இதுவரை காலமும் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றிய மிதவாத தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடமிருந்து போராடும் இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் கைக்குத் தலைமை மாறுவதை வரவேற்கிறோம்.

இது தொடர்பாக

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் , குறிப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் தலைவர் வே. பிரபாகரனுக்கும் எங்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கும், கிழக்கும் இணைந்த தமிழ்ப் பிரதேசத்தில் அசையாத நம்பிக்கை கொண்டிருப்பதை வரவேற்கும் நாம், மலையகத்தையும் இணைத்த தீர்வின் தேவையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

வடக்கு, கிழக்கு, மலையகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் முழு விடுதலையால் தான் இலங்கைப் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வைக் கொண்டுவர முடியுமென ஈழப் புரட்சி அமைப்பு அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. மலையகத் தோட்டத் தொழிலாளரின் போராட்டத்தை கைவிடக் கூடாது எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இதுவரை காலமும் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் உரிமைக்கும், உடமைக்குமான போராட்டத்தினை ஏமாற்றி வந்த மிதவாத அரசியல் கட்சிகளைப் பின்பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளும் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றக்கூடாது எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இன்று ஈழத்தில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் பாரிய ராணுவக் குவிப்பு நடக்கிறது. இதனைத் தடுப்பதன் அவசியம் இன்று பல மடங்காக வளர்ந்துள்ளது.

ஈழப் புரட்சி அமைப்பைப் பொறுத்தவரையில் தமிழ் பேசும் மக்களின் முழு விடுதலையும், இலங்கையில் வாழும் அடக்கப்படும், ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்களின் விமோசனமும் அடையும் வரை ஈரோஸ் போராடிக் கொண்டே இருக்கும்.

என்ற பொருள்பட இவ் அறிக்கை வெளிவந்துள்ளது.

இவ் அறிக்கையானது ஈழப் புரட்சி அமைப்பின் நான்கு முக்கிய அரசியல் நிலைப்பாடுகளை தத்ரூபமாக வெளிக் காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் முழு விடுதலை அடையுமட்டும், தமிழ் பேசும் மக்களுக்கு சமூக, பொருளாதார, அரசியல் விமோசனம் கிட்டப்போவதில்லை;

**வடக்கு, கிழக்கு, மலையகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்த விடுதலைதான் இலங்கைப் பிரச்சனைக்கான பரிகாரம். இப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் பிராந்திய, சாதி, சமய வேறுபாடின்றி ஒருமைப்பாட்டுடன் ஈழவர் என்ற ரீதியில் போராடுவதன் மூலம்தான் தங்களுக்கான விடுதலையை அடையமுடியும்

***
தமிழ் பேசும் மக்கள் விடுதலை அடையுமட்டும் இலங்கைப் பாட்டாளி வர்க்கம் மூலதனத்தின் (          ) கோரப்பிடியிலிருந்து விடுதலையடையப்போவதில்லை. ஆனால் இலங்கையின் முதலாளித்துவம் எல்லா வடிவங்களிலும், எல்லா கோணங்களிலிருந்தும் அழித்தொழிக்கப்படும் வரை தமிழ் பேசும் மக்கள் விடுதலை காணப்போவதில்லை.
இவைகள்தான் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையின் அரசியல் உள்ளடக்கம்.
இதன் நடைமுறை வெளிப்பாடுதான் ஈழப் போராட்டம்

****
இன்றையசூழ்நிலையில் ஈழப் போராட்ட நடைமுறைப் பிரச்சனைகளை கருத்தில்கொண்டு பலம் பொருந்திய எதிரியை எதிர்க்க எல்லா இயக்கங்களும் ஓரணியில் சேர வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து ஈழப் புரட்சி அமைப்பு அதன் நடைமுறைப் பயிற்சியையும் வரையறுப்பிட்டுள்ளது.

இது இயக்க எதிர்ப்பு வாதம் பற்றியது

ஈழப் புரட்சி அமைப்பு இயக்க எதிர்ப்பு வாதத்தில் அமிழப்போவதில்லை. இது எங்கள் நிலைப்பாடு. சரியான நிலைப்பாடு. இயக்க விருப்பு வெறுப்பற்ற நிலைப்பாடு. இயக்க எதிர்ப்பு வாதம் உள்ளிருந்து வெட்டும் புழுப்போல முடிவில் கண்களை மறைத்து ஈழப் போராட்டத்தையே கரு இழக்கச் செய்துவிடும்.

www.tamilarangam.net

ஆனால், இயக்க எதிர்ப்பு வாதம் வேறு, அரசியல் விமர்சனம் வேறு. அரசியல் ரீதியாக, அனுபவ ரீதியாக விமர்சிக்கத் தவறக்கூடாது. பிழைகளைச் சுட்டிக்காட்டி, சரியான பாதையை எடுத்துக்காட்டி அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களை அணிதிரட்டத் தவறக்கூடாது. இதில் தவறுவோமேயானால் இதுதான் சந்தர்ப்ப வாதம்.

இயக்க எதிர்ப்பில் ஈடுபடாமல் மக்களை அணிதிரட்ட முயல்வது சந்தர்ப்ப வாதமல்ல. சமயோசிதம், நடைமுறைத் தந்திரம்.

இது மிகத் தெளிவான நிலைப்பாடு என நம்புகிறோம்.

இல்லையென வாதிடுகின்றனர் சிலர். இவ் வாதத்தின் வெளிப்பாடாகத்தான், இவை குறித்த கருத்து வித்தியாசங்களின் பிரதிபலிப்பாகத்தான் இன்றைய சூழ்நிலைபற்றி ஆராயக்கூடிய ஈழத் தேசிய விடுதலை முன்னணி ( )15 நிமிடங்களில் கலைந்தது. மீண்டும் ஒருமுறை இன்னும் கூடவில்லை.

இவைகளைத் தொடர்ந்துதான் ஈழப் புரட்சி அமைப்பின் அறிக்கை சந்தர்ப்ப வாத அறிக்கையென்றும், ஈழப் புரட்சி அமைப்பு அரசியலில் சரணடைந்துவிட்டதென்றும், சாஸ்டாங்க நமஸ்காரம் செய்கிறார்கள் என்றும் மொத்தத்தில் சந்தர்ப்பவாதிகளென்றும் பிரச்சாரம் செய்கின்றனர் சிலர். ஆனாலும் ஈழப் புரட்சி அமைப்பின் சந்தர்ப்பவாதம் என்ன என கூறத் தயங்குகிறார்கள்.
ஏன் இந்த தயக்கம்?

ஈரோசின் இவ் அறிக்கையை ஒருமுறை திருப்பிப் பார்ப்போம்.
இந்திய அரசின் மனமாற்றத்தை திருப்பு முனையாக கருதுகிறோம். மிதவாத கட்சியிடமிருந்து பேச்சுவார்த்தை குறித்த தலைமை போராடும் இயக்கமான யின் கைக்கு மாறுவதை வரவேற்கிறோம். அதற்காக யை வாழ்த்துகிறோம். இதிலென்ன தவறு? இதிலென்ன சந்தர்ப்பவாதம்?
, , , யாருக்காவது சரி இப்படியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழைப்பிதழ் கிடைத்திருந்தாலும் நிச்சயமாக வாழ்த்து வோம், வரவேற்போம். இதில் தவறில்லை, சந்தர்ப்ப வசமு மில்லை.

ஏன், எப்படி, இந்த நிலைக்குத் தள்ளப்பட்டது? இந்த அங்கீகாரத்தை ஏற்றுக்கொள்ளுமா? ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதன் மூலம் திரிபுவாதக் கட்சி கள் போல் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றுமா? இவை வேறு கேள்விகள். அதேபோல் பேச்சுவார்த்தைக்கு யார் போகவேண்டும் என்பதும் முக்கிய கேள்வியல்ல. இதற்குப் போகத்தான் வேண்டுமா? போனால் அதன் உள்ளடக்கம் எப் படி அமையவேண்டும்? நான்கு அம்சக் கோரிக்கை தவிர்ந்த பேச்சுவார்த்தை சரியானதா? இவை முக்கிய கேள்விகள்.

இது ஒன்று, இரண்டாவதாக, இதுவரை காலமும் ஈழப் போராட்ட இயக்கங்கள் போராட்ட திரிபுவாத இன் அர்த்தமற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த திரிபுவாத கட்சியிடமிருந்த பேச்சுவார்த்தைக்கான தலைமைப் பீடத்தை மேல் இந்தியா முடிகட்டுகின்றது. இது ஒரு திருப்பு முனையா? இல்லையா? திருப்புமுனையென நாங்கள் நம்புகிறோம்.

ஆனால் இத் திருப்புமுனையை எந்த வகையில் ஈழப் போராட் ட முன்னெடுப்புக்காக பயன்படுத்தலாம்? இதுவும் ஒரு முக்கிய கேள்வி.

இக் கேள்விகளுக்குப் பதிலாகத்தான் ஈழப் புரட்சி அமைப்பின் அறிக்கை அமைந்துள்ளது.

மேலும் எந்த இயக்கமும் ஒரு ஒட்டு மொத்த அரசியல் நிலைப்பாடு எடுக்க வேண்டும், இது சார்ந்து மொத்த அரசியல் நிலைப்பாடு எடுக்க வேண்டும். இவைகளைத் தனது நடைமுறை தந்திரோபாயம் அமைய வேண்டும். இந்த அடிப்படையில் தான் ஒவ்வொரு சூழ்நிலையையும் கற்க வேண்டும். கணிக்க வேண்டும். கட்டுப்பாட்டுடன் கருத்துத் தெரிவிக்க வேண்டும். செயற்பட வேண்டும். இல்லையெனில் இயக்க எதிர்ப்பு வாதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்ணை மறைத்து ஈழப் போராட்டத்தையே கருவறுக்கச் செய்துவிடும். இந்த நிலைப்பாட்டிலிருந்து தான் ஈழப் புரட்சி அமைப்பின் அறிக்கை வெளிவந்துள்ளது.

இவைகளோடு, அரசியல் ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் விமர்சித்து கற்றுக்கொள்ள வேண்டும். தீர்வுகள் வைக்கப்படும் போதும், நடைமுறைப்படுத்தப்படும் போதும் தான் அரசியல் ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் விமர்சித்து சரியான முறையில் போராட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டும். தீர்வுகளும், நடை முறைகளும், இதன் தோல்வி வெற்றிகளின் அனுபவங்களும் ஒன்று கலந்து முந்திய நிலையில் உருவாகும் மக்கள் துடிப்பை, எதிர்ப்பை லாவகமாக பயன்படுத்தி சரியான பாதைக்கு அவர்களை இழுக்க வேண்டும். அணிதிரட்ட வேண்டும். போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இன்றைய சூழ்நிலை நிரந்தர மாற்றங்களைக்கொண்டதோர் சூழ்நிலை, சடுதியாக பல விடயங்கள் நடந்தேறுகின்றன, மாறுகின்றன. இந்நிலையில் எதிர்காலத்தில் இதுதான் நடக்குமென கணிக்க முடியாது. யாராலும் முடியாது. ஆகவேதான் இதுதான் நடக்குமென்ற கற்பனையில் 'தலைக்கு முந்திய வால் போல' இவன் நாளை கிணற்றுக்குள் விழுந்து சாவான் என்று சாத்திரம் பார்த்து இன்று இழவு வீடு நடத்துவது போல 'கற்பனை விமர்சனம்' செய்யக்கூடாது. இது மக்களிடமிருந்து இயக்கங்களை அந்நியப்படுத்தத்தான் உதவுமே தவிர அந்நியோந்நியப்படுத்த ஏதுவாக அமையாது.

இன்று தமிழ் பேசும் மக்கள் சமாதானத்தையும், அமைதியையும், சுதந்திரத்தையும் சரியான தீர்வுகளின் மூலம் விரும்புகிறார்கள். இந்தத் தீர்வு ஒரு பிராந்தியத் தீர்வாக இருக்க முடியாது.

மன்னார் முதல் மட்டக்களப்பு வரை, பருத்தித்துறை முதல் பதுளை வரை, பொத்துவில் உள்ளடங்கிய பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கான சாதி, சமய, பிராந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முரண்பாடற்ற தீர்வாக அமைய வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் முழு விடுதலையையும் தாங்கி நிற்கும் தீர்வாக அமைய வேண்டும். தாக்கி நிற்கும் தீர்வாக அமையக்கூடாது.

இலங்கை முராகவும் மக்களின் விடுதலைக்கு வடிவு தர ஏதுவாகவும் அமைய வேண்டும். விலங்கிடும் தீர்வாக அமையக்கூடாது.

இதுதான் தமிழ் பேசும் மக்களின் பாட்டாளி வர்க்கத்தின் விருப்பம்.

இவைகளின் அடிப்படையிலான சமாதானமும், அமைதியும், சுதந்திரமும் ஒரு 'பிராந்திய மக்கள் பாதுகாப்பு' அடிப்படையில் உருவாக முடியாது. இது உண்மை. ஆனால் மக்கள் பொதுவாக இது சரியென நினைப்பார்களேயானால், அவர்கள் இதன் தவறை அனுபவ ரீதியாக உணர்ந்து செயற்படக் கூடிய வகையில் தலைமைதாங்கி போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டும்.

இவைகளை மனதில் கொண்டுதான் ஈழப் புரட்சி அமைப்பின் அறிக்கை வெளிவந்துள்ளது.

வெளிப்படையாகவே பார்ப்போம்.

இந்திய அரசின் இந்த அடிப்படை அங்கீகாரத்தையும் ஏற்று பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்களேயானால் தமிழீழம் தவிர்ந்த வேறெந்த நோக்கமும் இல்லை என்ற நிலைப்பாட்டிலிருந்தும், ஆயுதம் தாங்கிய போராட்டம் தான் என்ற நிலையிலிருந்தும், தமிழீழத் தீர்வு ராணுவத் தீர்வு என்றால் மட்டும் தான் என்ற நிலையிலிருந்தும் வழுவுகிறார்கள் என்றுதான் அர்த்தம். வரலாறு உருவாக்கிய இந்தத் தவறான கோரப் பிடியிலிருந்து எப்படித் தப்பித்துக்கொள்ளப் போகிறார்கள் என்பது அவர்களுடைய பிரச்சனை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் ஈழப் போராட்ட வெற்றிக்கு எல்லாப் போராட்ட வடிவங்களையும் உபயோகிக்க வேண்டுமென்றும், சரியான முறையிலான அடிப்படையைக்கொண்டே பேச்சுவார்த்தையையும் ஒரு போராட்ட வடிவம் தான் என்றும், இதுவரை காலமும் செயற்பட்டு வந்தவர்கள் இன்றைய இந்தச் சூழ் நிலையைக் கண்டிக்கக்கூடாது. கௌரவிக்க வேண்டும். வரவேற்க வேண்டும். வாழ்த்த வேண்டும். வரவேற்பது சந்தர்ப்ப வாதமல்ல, கண்டிப்பதுதான் சந்தர்ப்ப வாதம்.

வரவேற்கும் அதேவேளையில்,

பேச்சுவார்த்தை ஒரு மூலோபாயமாகவும், இந்திய அரசு கேட்கிறதே என்பதற்காகப் பேச்சுவார்த்தையும், எதையும் தாருங்கள் மக்களிடம் போகிறோம் என்ற அடிப்படையிலான பேச்சுவார்த்தையும், மிதவாதக் கட்சிகளின் போக்கே தவிர போராட்ட இயக்க நிலைப்பாடாக இருக்கக்கூடாது என சுட்டிக்காட்டுகிறோம்.

தமிழ்த் தோட்டத் தொழிலாளர் பிரச்சனைகளும், ஈழப் போராட்டத்தில் இணைக்கப்பட்ட அடிப்படையிலான தீர்வுக்கு வழிவகுக்காமல், மிதவாதக் கட்சிகளைப் பின்பற்றி தோட்டத் தொழிலாளர் ஏமாற்றப்படுவார்களேயானால் அரசியல் சாக்கடைக்குள் தான் யாரும் தள்ளப்படுவார்கள் என அழுத்தம் திருத்தமாககூறுகிறோம்.

மேலும், தமிழ் பேசும் மக்களுக்கான இடைக்கால தீர்வு வந்தாலும், அவர்களின் முழு விடுதலையும் சமூக, பொருளாதார, அரசியல் விமோசனம் கிட்டும் வரை இலங்கையில் வாழும் பாட்டாளி வர்க்கத்தின் விமோசனம் வரும் வரை ஈழப் புரட்சி அமைப்பு போராடும், தொடர்ந்து போராடும்.

இது எங்கள் கடமை.

ஈழப் புரட்சி அமைப்பின் கடமை.

****************



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்